செ. வெ எண்: 461 நாள் : 28.08.2013

# செய்தி வெளியீடு

உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வியினை தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவ, மாணவியரும் குறிப்பாக அரசுக் கல்லூரிகளில் பயிலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களும் பெற்று அவர்களது திறன் மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தினை செயல்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அந்த அடிப்படையில், அரசுக் கல்லூரிகளில் பயின்று வரும் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களின் கல்வி திறன் மற்றும் பேராசிரியர்களின் கற்பிப்பு திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில், அவர்களை அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி குறிப்பிட்ட கால அளவுக்கு கல்வி கற்கச் செய்யவும், ஒருங்கிணைந்த சிறப்பு பயிற்சி மற்றும் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்வதற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்திற்கும், தென்னிந்திய பிரிட்டிஷ் கவுன்சிலுக்கும் இடையே 13.12.2012 அன்று தலைமைச் செயலகத்தில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி 2013 ஆம் ஆண்டு முதல் 25 மாணவர்கள் மற்றும் 5 பேராசிரியர்கள் அயல்நாடு சென்று கல்வி கற்கவும், பயிற்சி மேற்கொள்ளவும், ஒவ்வொரு மாணவருக்கும், பேராசிரியருக்கும் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் மூலம் 15 லட்சம் ரூபாய் அனுமதித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன் அடிப்படையில், பல்வேறு கட்ட தேர்வுகள் மூலம் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்ட 14 மாணவ, மாணவியர்களும், 3 விரிவுரையாளர்களும்

எட்ஜ்ஹில், நாட்டிங்ஹாம், ராயல் ஹாலோவே மற்றும் பர்மிங்ஹாம் ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களுக்கு கல்வி கற்கவும், பயிற்சி மேற்கொள்ளவும் 28.8.2013 மற்றும் 21.9.2013 ஆகிய தேதிகளில் பயணம் மேற்கொள்ள உள்ளனர். இவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 27.8.2013 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

அச்சமயம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு கல்வி பயில உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் அனுமதி கடிதம் மற்றும் விமான பயணச் சீட்டு ஆகியவற்றை வழங்கி, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உள்ள கல்வி வசதிகளை நன்கு பயன்படுத்தி, தங்களது அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அதன் மூலம் தமிழகம் பயன்பெற பாடுபடவேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வாழ்த்துப் பெற்ற மாணவ, மாணவியர்களும், விரிவுரையாளர்களும், தங்களுக்கு இந்த அரிய வாய்ப்பை நல்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தென்னிந்திய பிரிட்டீஷ் கவுன்சில் இயக்குநர் திரு பால் செல்லர்ஸ், உயர் கல்வித்துறை முதன்மைச் செயலாளர், சென்னை பிரிட்டீஷ் கவுன்சில் டிவிஷன் அலுவலர் திரு எல். தனசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 28.8.2013